அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 290/2007

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.சா.1 | 15.04.2026 |
| பெயர் தர்மேஸ்வரன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-

1. பி.சா.ஆ 1 1953 கிரையஆவணம் படி எவ்வளவு சொத்து வாங்கப்பட்டது என்றால் 187X16 அடி ஆகும். அவ்வாறு கணக்கு எடுத்தால் 1953 மற்றும் 1961 ல் பெற்ற 187X16 அடி சொத்து சேர்த்து மொத்தம் 6187.5 சதுரஅடி சொத்து உள்ளதா என்றால் கணக்கு போட்டால் தான் தெரியும். இந்த இரண்டு கிரையஆவணங்கள் படிதான் நான் சொத்தில் உள்ளேனா என்றால் இதன்மூலமும் எனது தந்தையின் பூர்வீகம்மூலமாகவும் உள்ளேன். எனது அப்பாவிற்கு லோகநாதமுதலியார் எவ்வாறு சொந்தம் என்றால் எனது அப்பாவின் பெரியப்பா மகன் ஆவார்.

2. எனது தாத்தாபெயர் பாலசுப்புரமுதலியார் ஆவார். பாலசுப்புரமுதலியார் அண்ணன் பெயர் என்றால் அவரது அண்ணன் ஏகாம்பரமுதலியார் மற்றும்

பெரிய அண்ணன் சிதம்பரமுதலியார். அவர்கள் அப்பா பெயர் ராமசாமிமுதலியார் ஆகும். வழக்கு சொத்து ராமசாமிமுதலியாரின் சொத்து என்றால் ஆமாம். ராமசாமிமுதலியார் என்பவருக்கு பாலசுப்புரமுதலியார், ஏகாம்பரமுதலியார் மற்றும் சிதம்பரமுதலியார் என்ற 3 மகன்கள் உள்ளார்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாலசுப்புரமுதலியாருக்கு 2 ஆண் மற்றும் 2 பெண்பிள்ளைகள். துரைசாமிமுதலியார், மாணிக்கம், ஜெயலட்சுமி, உமாபார்வதி ஆவார்கள். பாலசுப்புரமுதலியார் இறப்பு சான்றிதழ் அல்லது வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. ராமசாமிமுதலியார், பாலசுப்புரமுதலியார் பாகபிரிவினை ஏற்படுத்தி அதன் மூலம் பாலசுப்புரமுதலியாருக்கு பாகம் பிரித்தாகவோ அவ்வாறு சொத்து கிடைத்ததாகவோ காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வீடு தெற்கு மாடவீதியை நோக்கியுள்ளது என்றால் சரிதான். எனது வீட்ற்கு அருகில் உடைந்த நிலையில் ஓட்டுவீடு தெற்கு மாடவீதியை நோக்கு வாதியின் வீடு இருந்தது என்றால் சரிதான். நான் வாங்கிய இடம் பின்னால் இருக்கும் கிணறுவரை இருக்கும் என்றால் கிணறை தாண்டி சாலை வரும்வரை இடம் உள்ளது. வாதியின் வீட்டிற்கு பின்னால் வாதிக்கு இடம் உள்ளது என்றால் சரியல்ல.வாதியின் வீட்டிற்கு பின்னால் உள்ள இடம் ராமசாமிமுதலியார் இடம் என்றால் சரிதான். பூர்வீக இடமாகும். மேற்கூறிய வாதிவீட்டிற்கு பின்னால் இருக்கும்இடம் பாகம் பிரித்ததற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

4. பி.சா.ஆ 3 ஆவணம் நான் தங்கியிருக்கும் இடத்திற்கான நிலம் என்றாலும் அதற்கு விஸ்திரனம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ 3 ஆவணம் எந்த வருடம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. பி.சா.ஆ 4 ஆவணத்தில் எவ்வளவு நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் 47 செண்ட் நிலம் சொல்லப்பட்டுள்ளது. பி.சா.ஆ 4 ஆவணத்தில் 27 செண்ட் என்று போட்டு அது அடிக்கப்பட்டு கீழே 20 செண்ட் என்று எழுதப்பட்டுமொத்தமாக 47 செண்ட் என்று வேறு பேனாமையால் எழுதப்பட்டுள்ளது என்றால் நான் அடித்து எழுதவில்லை. பி.சா.ஆ 4 ஆவணத்தில் 31.12.1980 தேதியிட்ட நோட்டிஸ் மூலம் என்னை விசாரணைக்காக 22.01.1981 அன்று ஆஜராகும் படி நோட்டிஸ் வந்துள்ளது என்றால் சரிதான்.

5. பி.சா.ஆ 5 முதல் 7 வரையிலான ஆவணங்கள் வீட்டின் அனுபவ ஆவணங்கள் என்றாலும் காலியிடத்திற்கான ஆவணம் இல்லை என்றாலும் சரிதான். பி.சா.ஆ 8 ஆவணத்தில் பாகம் பிரியவில்லை என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ 8 மற்றும் 9 ஆவணத்திலும் 5 குமாரர்கள் யார் என்ற பெயர் விவரம் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ 9 ஆவணத்தில் தளம் வீடு , தச்சுவீடு, மனை என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்துகொண்டு இருந்தேன் என்றால் VAO ஆக இருந்தேன். 1989–ஊத்துக்கோட்டை அடுத்து பொன்னேரி தாலுக், அடுத்து குமிடிப்பூண்டி, அடித்து அம்பத்தூர் இடங்களில் VAO ஆக இருந்தேன். அம்பத்தூரில் எந்த வருடங்கள் VAO ஆக இருந்தேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் எப்போது ஓய்வு பெற்றேன் என்றால் 2005 ஆகும்.

6. பூர்வீக சொத்தின் மூலம் உரிமைகோரினால் எனது முன்னோரின் இறப்பு சான்றிதழ் வாரிசு சான்றிதழ் , பாகபிரிவினை ஆவணம் ஆகியவற்றை பரிசீலித்தபிறகு தான் உரிமை உள்ளதா என்று சொல்லமுடியும் என்றால் சரியல்ல. நிலபிரச்சனை ஏற்படும்போது

சர்வேயர் வைத்து அளந்தால் தெளிவு ஏற்படும் என்றால் சரிதான். தற்போது வழக்கறிஞர் ஆணையர் மற்றும் நிலஅளவையர் மூலம் நிலத்தை அளக்கலாமா என்றால் ஏற்கனவே அ.வ.எண் 305/2007 வழக்கில் ஆணையர் நியமிக்கப்பட்டது. தற்போது அ.வ.எண் 305/2007 நிலுவையில் இல்லை என்றால் Restoration petition நிலுவையில் உள்ளது.

7. அ.வ.எண் 305/2007 வழக்கு சொத்து விவரத்தில் Door No.29,42,29,29,&21/1 என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துவிவரத்தில் 16.5X187.5 மற்றும் 16.5X187.5 சொத்து போக பாக்கி சொத்து எவ்வளவு அளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வேதகிரிமுதலியார் தந்தை பெயர் செங்கல்வராயமுதலியார். அவருக்கும் ராமசாமிமுதலியாருக்கும் எவ்வாறு சம்மந்தம் என்றால் ராமசாமிமுதலியார் சொத்து ஏலத்தில் சென்றபோது வேதகிரிமுதலியார் ஏலத்தில் சொத்தை பெற்றார். ராமசாமிமுதலியார் இடம் ஏலம் சென்றுவிட்டதால் நான் சொத்தில் எந்தஉரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

8. எனக்கு உரிமையில்லாத இடத்தில் , நான் VAO ஆக இருந்தபோது ஆவணங்களை தயாரித்து அதன்மூலமாக சொத்து கிடைக்கவேண்டும் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி என்மீது வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் நான் வாதியின் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை சரியாக நடத்தாமல் அது தள்ளுபடி செய்ததால் இந்த வழக்கை நான் நடத்துகிறேன் என்றால் சரியல்ல. வாதி அவரது வீட்டிற்கு பூமிபூஜை செய்யும்போது நான் தடுத்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.வ.எண் 305/2007 பிராதிலும் , இந்தவழக்கில் எனது பதில்உரையில் வாதியின் வீடு எனது வீட்டிற்கு அருகில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்

சரிதான். நான் பொய்யான சங்கதிகளை கொண்டு பொய்யான பதில்கள் கூறி என்வழக்கின் பதில்உரையிலும் தற்போது சாட்சியமும் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.